சாமிதிந்தகத்தோம்! தோம்!!

ஐயப்பன் பாடல்கள்

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

பாகம் – 2



சாமி திந்தக்க தோம்! தோம்!

(ஸ்ரீ ஐயப்பன் பாடல்கள்)

சாமி திந்தக்க தோம்! தோம்!

(ஸ்ரீ ஐயப்பன் பாடல்கள்)

பாகம் 2

ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

நூல் விவரம்

- நூற்பெயர் :
  சாமி திந்தக்க தோம்! தோம்!
  (பாகம்-2)

- ஆசிரியர் :
  கலைமாமணி
  டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

- உரிமை :
  எஸ். அம்சவள்ளி
  (W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)

- அச்சிட்டோர் :
  பிராசஸ் இந்தியா
  294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
  இராயப்பேட்டை, சென்னை - 14.

- For Sales &
  Enquiries Contact : **S. AMSAVALLI**
  14, Amirtham Avenue, Bharani Street,
  Velacherry, Chennai - 600 042.
  Mobile : 9380297675, 9566042884
  email : ussankarram@gmail.com
  ussankarram@yahoo.com

- பதிப்பு : 2011

- பக்கம் : 60

- விலை : **35/-**

- நூலாக்கம் :
  டெலிபாய்ன்ட்
  16, சின்னப்ப தெரு,
  திருவல்லிக்கேணி,
  சென்னை - 5.
  Ph : 2848 3750

- காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளியீடு : நெய்தல் பதிப்பகம்
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

– வாலி –

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது – நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்

இளம் புன்னகையை வைத்து

தன்வயம் எவரையும் ஈர்த்த

தண்முகம்;

நுவலும் பேச்சிலும்.

நோற்கும் பாட்டிலும்.

நுழைபுலம் துலங்க நிற்கும்

நுண்முகம்!

* * *

உருவம் குறில்;

உள்ளம் நெடில்; அவன்

உண்ணா

உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;

ஆறுமுகனையும்.

ஆனைமுகனையும்.

அதிகம் பாடியதாய்

ஆரைச் சொல்வது அவனை விடில்?

* * *

இவனால் தான்

இவன் பிறந்த

உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்

எழுந்தூர்ப்பேட்டை ஆனது;

இவன்

இயற்றிய

தனிப்பாடல்களாலும்;

திரைப்பாடல்களாலும்;

கானத்தமிழ்

கடல்கள் தாண்டி -

உலகத்தார்

உட்செவிக்குள் போனது!

* * *

வேங்கடவன்;

வேலவன்;

வேழமுகன்;

வாயு மகன்;

இன்னும்

இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;

விசிறி சாமியார்;

என

எந்த -

இறையும்;

இறையடியாரும் மிச்சமின்றி.....

இவனது -

பாடுபொருள் ஆயினர்; இவன்

பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் - இந்தக்

கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து

பெருமாளிடம் வந்தவன்;

தான்பெற்ற இன்பம் - இந்தத்

தரணிபெற வேண்டி -

ஆன்ம

அனுபூதியை -

வையம் உய்யுமாறு

வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்

சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -
அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....
போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

*   *   *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

*   *   *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....
அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

*   *   *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;

நல்ல பெயர்த்திகள்;

இவர்களின்

இதயங்களில் மட்டுமல்ல -

எம்மனோர்

எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -

வாழ்வாங்கு

வாழ -

கருத்துகளைக்

கற்கும்!

* * *

வாலி

கலைமாமணி
டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
ஒரு சிறு குறிப்பு

கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று.

சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப் பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாடுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

நெய்தல் பேசுகிறது....

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
உலகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

பொருளடக்கம்

ஸ்ரீ ஐயப்பனின் 300 திவ்யத் திருநாமங்கள் 17

ஸ்ரீ தர்மசாஸ்தா சகஸ்ரநாமம் தமிழாக்கம் 31

ஸ்ரீ ஐயப்பனின் 300 திவ்யத் திருநாமங்கள்



ஸ்ரீ ஐயப்பனின் 300 திவ்யத் திருநாமங்கள்

சந்த்ர மௌலீ மோஹினி புதல்வா
சரணம் சரணம் சரணம் பொன் ஐயப்பா 1
அண்டம் யாவும் மேனியைத் தழுவும்
ஐயப்பா சரணம் சரணம்பொன் ஐயப்பா 2
கண்கள் சடசும்உன் காந்தியில் ஐயப்பா 3
அறுசுவை அன்னம் சுவைப்பாய் ஐயப்பா 4
ஓங்கார ஒலியால் அற்புதம் படைப்பாய் 5
காந்த மலையோய் சரணம்பொன் ஐயப்பா

மாளிகை உச்சியில் வாழ்வோய் ஐயப்பா 6
சூரிய சந்திரர் அக்கினி தலைவா 7
வாரி வழங்கும் வள்ளலே ஐயப்பா 8
வேத உபநிஷ;த சாரமே ஐயப்பா 9
ஹ்ரீம்கார மந்திர ஒலிதிகழ் ஐயப்பா 10
ஹ்ரீம்கார வடிவோய் சரணம்பொன் ஐயப்பா 11
நாணம் மிக்கோய் சரணம்பொன் ஐயப்பா 12
சாமி சரணம் சரணம்பொன் ஐயப்பா

உரத்த குரலால் அரக்கரை அழித்தோய் 13
உயிர்க்குலம் போற்றும் உத்தமா ஐயப்பா 14
கொடிய புலியையும் ஒலியால் அடக்கி 15
குவலயம் காக்கும் குமரா ஐயப்பா
எப்போதும் புன்னகை மகிழ்ச்சியில் ததும்பும் 17
ஒப்பிலா அழகா சரணம்பொன் ஐயப்பா 16
இதயக் குகையிலே இருப்பாய் ஐயப்பா 18
ஹரியின் புதல்வனே அன்பனே ஐயப்பா 19/20

இந்திரன் முதலாய் எண்திசைக் காவலர்	
போற்றி வழிபடும் புனிதா ஐயப்பா	21
முழுநிலா முகத்தோய் முத்தணி மார்பா	22
ருத்ராக்ஷ ரத்ன ஆரங்கள் அணிந்தோய்	23
ஆல காலத்தை அரன்உண்ண வேண்டி	
எடுத்துக் கொடுத்த ஏந்தலே ஐயப்பா	24
சிம்ம உருவம் கொண்டாய் ஐயப்பா	25
சிங்கத்திலேறி வந்தாய் ஐயப்பா	26
அஸ்வ மேத யாகம் உவப்போய்	27
ஆடல் பாடலில் களிப்போய் ஐயப்பா	28
ஏழை எளியோர் பூஜையில் வருவோய்	29
எல்லோர்க்கும் சமநீதி அளிப்போய் ஐயப்பா	30
நதிநீர் பெருக வழிவகை அமைப்பாய்	31
பகைவரை அழிக்கும் பந்தளன் பாலா	32
ரிஷிஎனும் முனிவர்க்கு குருவாய் அமைந்தோய்	33
'ரீம்' ஒலி யாலே யானையை அடக்குவோய்	34
கண்டா மணியின் ஒலிகள் கேட்போய்	35
மந்திர பீஜம் 'ரீம்'அதன் தலைவர்	36
சிவனின் புதல்வா சிவ பூஜை செய்வாய்	37/38
பிறைமுடி அழகா பரிமேல் வருவோய்	39/40
ஹரிஹரன் மைந்தா ஹயக்ரீவர் தேவா	41/42
தயையில் வெண்ணையாய் இளகும் தலைவா	43
சிவனின் ஆசைக் குமரா ஐயப்பா	44
யாகத்தின் ஹவியாய்த் திகழ்வாய் ஐயப்பா	45
காக்கும் கடவுளே சரணம்பொன் ஐயப்பா	46
லோக பாலகா அரக்கரை அழிப்போய்	47/48
மக்களின் நேசா மகிமைப் ப்ரதாபா	49
இருளில் காட்சி அருள்வோய் ஐயப்பா	50
சிலம்பணி செல்வா மாறனை நிகர்த்தோய்	51/52
ரதியும் காமனும் வழிபடும் அழகா	53

விஷ்ணு குமாரா புலித்தோல் அமர்வோய்	55/56
பூரணை புஷ்களை நாதா ஐயப்பா	54
இந்திரன் போற்றும் திருவடிச் செல்வா	57
புஷ்ப தந்தன் பூஜிக்கும் புனிதா	58
ஜெயந்தன் புஷ்கலை போற்றிடும்தேவா	60/59
திரிபுநாந்தகன் வலப்புறம் அமர்ந்தோய்	61
புண்ணியம் வளர்ப்போய் புலி வாஹனனே	62
யானை சிங்கம் குதிரை ஊர்தியோய்	63
நரவா ஹனமும் கொண்டோய் ஐயப்பா	
காக்கும் கடவுளே கலியுக வரதா	64
மறைகள் போற்றும் மணிகண்டா ஐயப்பா	65
அச்சம் நீக்கி அபயம் அளிப்போய்	66
முக்குணம் கடந்த முனிவா ஐயப்பா	67
முப்பத்து முக்கோடி தேவர்கள் தேவா	68
காப்பதைக் கடமையாய் ஏற்றே நடப்போய்	69
மூவுல களந்த மால்போல் நெடியோய்	70
முக்கண் மூவுரு கொண்டோய் ஐயப்பா	71/72
தேரை ஓட்டும் சாரதி ஐயப்பா	73
அஷ்டதிக் கஜங்கள் பர்வதம் நாகம்	
அனைத்தையும் காக்கும் ஆற்றலோய் ஐயப்பா	74
சந்யாசி உருவில் சாந்தியைத் தருவோய்	
சரணம் சரணம் சரணம் பொன் ஐயப்பா	75
வேள்வி மேடையில் வீற்றிருப் பாய் நீ	76
யாகப் பிரியனே வேள்விசெய் ஐயனே	77/78
யோஹியர் தலைவா யஜசர்வேதம் போற்றும்	79
சாமியே சரணம் சரணம் பொன் ஐயப்பா	80
பொன்னம் பலத்தில் ஆடும் அழகா	81
புரந்தரன் போற்றும் பூத நாதா	82
புண்ணிய உருவாய்ப் பொலிகின்ற தேவா	83
அறம் பொருள் இன்பம் வீடும் அளிப்போய்	84

புரு மன்னன் வம்சம் புகழ்பெறச் செய்தோய்	85
யாக முடிவில் ஹோமத்தில் திளைப் போய்	86
பூப்போல் மெல்லிய மதுர மேனி	87
சூரியசந்திரர் அக்கினி மண்டலா	88
ஜாக்ரத் ஸ்வப்ன ஸசுஷுப்தி நிலையோய்	89
ஏழு மேகத்தை ஏவும் வீரா	90
முக்கண்ணன் மைந்தா முந்நூறு கரத்தோ	91/92
முப்புரி நூலா முக்கோண நாதா	93/94
வேதம் உணர்த்தும் வித்தகா ஐயப்பா	95
ஊர்தொறும் உயிர்க்குலம் காக்கும் ஐயப்பா	96
திருணா வர்த்த அசுரனை ஜெயித்தாய்	97
முக்காலம் அறிந்த பெற்றியோய் ஐயப்பா	98
பரமனின் மூன்றாம் பாலக ஐயப்பா	99
லாங்கூல வேதம் போற்றும் ஐயப்பா	100
காமனும் தோற்கும் லாவண்ய ஐயப்பா	101
லவணா சூரனை வதம்செய்த ஐயப்பா	102
சபரியில் ராமனுக்கு தரிசனம் தந்தவா	103
திருமகள் அருளினைத் தருபவா ஐயப்பா	104
மாந்தளிர் மேனி மணிகண்டா ஐயப்பா	105
லம்பிகா யோகம் உணர்த்திடும் ஐயப்பா	106
கொடிபோல் அசையும் திருமேனி கொண்டவா	107
கொடுப்போர் சூழ இருப்பவா ஐயப்பா	108
கோடி சூரிய ஒளியோய் ஐயப்பா	109
நேரில் பேசும் நிர்மலா ஐயப்பா	110
பயத்தை அகற்றும் பக்த வத்ஸலா	111
பயம்தரும் சேனை படைபலம் கொண்டவா	112
பீமனின் தோழா சாமியே ஐயப்பா	113
இகபர சுகங்கள் ஈந்திடும் ஐயப்பா	114
புசுண்ட முனிவர் வழிபட்ட ஐயப்பா	115
ஆபரணம் அணி ஆவல்கொள் ஐயப்பா	116

விபூதிப் பிரியனே தொல்லைகள் அற்றவா	117/118
யாகம் செய்பவா யக்ஷர்கள் மன்னவா	119/120
யமுனா நதிக்கரை அமர்ந்தவா ஐயப்பா	121
யந்திரத்தில் வணங்குவோர் அன்பில் திளைப்பவா	122
ஐம்புலன் அடக்கிய ஆண்மையோய் ஐயப்பா	123
யமனுக்கும் ஆணைகள் விடுத்திடும் ஐயப்பா	124
இரவில் சஞ்சரிக்கும் இருளன் வெறியன்	
சாமுண்டி துண்டி போன்ற உன் சேனையர்	
பரிவார கணங்கள் போற்றியே துதிப்பார்	125
யமனுக்கும் மேம்பட்ட திறமையோய் ஐயப்பா	126
சங்கரன் உருவம் தாங்குவோய் ஐயப்பா	127
சிவனுக்கு ஆனந்தம் சேர்ப்போய் ஐயப்பா	128
சங்கு சக்கரம் கதாயுதம் தாங்கி	129
சங்கொலி முழங்கும் சாமியே ஐயப்பா	130
சாஸ்தா எனப்பெறும் சத்தியமே ஐயப்பா	131
ஒற்றைச் சக்கரத் தேரினில் வருவோய்	132
மஹேஸ்வரி புதல்வா மணிகண்டா ஐயப்பா	133
பில்லி ஏவல் பிணிகளை ஓட்டுவோய்	134
சகுனி சூக்தம் சாற்றிடும் ஐயப்பா	135
பறவைகள் நண்பா பந்தள ராயா	
காலங்கள் அறிந்த கண்ணியா ஐயப்பா	136
த்ரோடகர் முனிவர்கள் போற்றிடும் ஐயப்பா	137
விருத்தச் சந்தத்தில் விருப்பம் கொண்டவா	138
மூன்று வண்ணக் கோலம் பூண்டவா	139
மூவுல காள்பவா முப்பால் தருபவா	140/141
முந்நூறு நாம அர்ச்சனை ஏற்பவா	142
கர்மா உபாசனை ஞானம் உணர்த்துவாய்	143
த்ரிகூட மலைநடுவே கொலுஅமர்ந் திடுவாய்	144
மானிடனாய் வந்தவா மாந்தர் பூஜை ஏற்பவா	145/146
பூரணை புஷ்களை மருவிட நின்றவா	147

பல்லக்கில் ஏறி பவனி வருபவா 148
அர்ஜுனன் கண்ணனிடம் அன்பினைவைத்தவா 149
கன்னியர்க்கும் காளையர்க்கும் கல்யாணம் முடிப்பவா 150
எப்போதும் சந்தோஷ இயல்பினைக் கொண்டவா 151
நந்தீசன் தாளத்தில் நாளும் லயிப்பவா 152
நாரதர் முனிவர்கள் போற்றிகள் ஏற்பவா 153
இந்திரன் உருவத்தை ஏற்று நடப்பவா 154
முருகனைப் போலவும் தோற்றம் எடுப்பவா 155
சாக்த சமயத்தைச் சார்ந்தே செல்பவா 156
சண்முகன் தம்பிநான் என்பதில் மகிழ்பவா 157
சந்திரனுக் கொப்பான குளிர்வண்ணம் கொண்டவா 158
சத்ருசம் ஹாரத்தில் ஒப்பிலா ஐயப்பா 159
வில்லாளி வீரனே மணி கண்டா ஐயப்பா 160
சிவன்மடி தவழ்ந்தவன் சிந்தை நிறைந்தவா 161
சைவசித் தாந்தத்தில் தன்னை மறந்தவா 162
சதுர்மறை விதிமுறை நடைமுறை செய்பவா 163
பூணூல் அணிந்தவா வாலிபா ஐயப்பா 164/165
பார்த்தனைத் துரத்திய பன்றியைக் கொன்றவா 166
ஆகம விதிப்படி பூஜைகள் ஏற்பவா 167
அறுபத்து நான்குகோடி யோகினி சூழ்ந்தவா 168
கர்ண யக்ஷிணியிடம் கதைகளைக் கேட்பவா 169
புவனேஸ்வரி மந்திரம் யந்திரத்தில் வைத்தவா 170
ஆதார சக்திகளை அங்கத்தில் கொண்டவா 171
மந்திரங்கள் அனைத்தையும் மனத்தில் பதித்தவா 172
மந்திர வாதிகளின் தலைவனாய் நின்றவா 173
மணிவாக் கருள்பவா நவமணி அணிபவா 174/175
உலகமே வழிபடும் ஒப்பற்ற ஐயப்பா 176
அன்னத்தின் மேலேறி அனைத்துலகும் ஆள்பவா 177
நவரத்ன மண்டபத்தின் நடுவீற் றிருப்பவா 178
கற்பக மரத்தின்கீழ் காற்றாட அமர்பவா 179

மார்த்தாண்ட பைரவா தண்டனை தருபவா	181
பாவத்தைக் கண்டிக்கச் செய் பக்குவம் அருள்பவா	182
சுக்குமாந் தடிகொண்டு சூழ்ச்சியை வெல்பவா	183
அசுரரை வீழ்த்திடும் ஹரி - அவன் பாலகா	184
தேவரில் உயர்ந்தவா தேவர்களின் மன்னவா	185/186
தேவசபைக் கலைஞர்க்கு ஆசானே ஐயப்பா	187
பகல்போல் சுடர்பவா கணபதி சோதரா	188/189
சந்தணக் குழம்பணிந்த சாஸ்தாவே ஐயப்பா	190
சங்கையில் பிறந்தவா அம்பிஹைக்கு உகந்தவா	191
நற்குணம் நிறைந்தவா நல்வழி சொல்பவா	192/193
கருணா சாகரா திருநீற்று மேனியோய்	195
கோகர்ணத் தலத்திலே கொலுவீற்றிருப்பவா	196
கோதாவரிக் கரையில் கோயில் கொண்டவா	197
கோபிகா ஸ்தீரிகளுக்கு குதூகலம் ஆனவா	198
உலகங்கள் காப்பவா உலகினை ஆள்பவா	199/200
ஜனகாதி முனிவர்கள் வணங்கிடும் தூயவா	201
ஜனத்திரன் நெருங்கிடும் சக்தி படைத்தவா	202
சினத்தீ அற்றவா பிணிபோக்க வல்லவா	203/204
தேவேந்திரன் வணங்கும் செல்வா ஐயப்பா	205
லோக சாட்சியாய் உயிர்க்குலம் காப்பவா	206
செம்பருத்திப் பூப்போன்ற சிவந்த நிறத்தவா	207
வாதநோய் நீக்கியே வாட்டம் தவிர்ப்பவா	208
எழில்தவழ் விழிகொண்ட வாமன ரூபனே	209/210
அடியார் ஆசையை நொடியில் அருள்பவா	211
காசி ராஜனே கேட்டதைத் தருபவா	212/213
விந்த்யமலை அடக்கிய அகஸ்தியர் போன்றவா	214
அகத்திய மாமுனி சேவித்த ஐயனே	215
யாழினை மீட்டிடும் அருங்கலை வாணனே	216
அயக்ரீவர் வழிபட்ட ஆனந்த ரூபனே	217
அசுரரை, பகைவரை, அழிப்பதில் காலனே	218

குதிரை ஏற்றத்தில் உவகை கொண்டவா 219

அடியார்கள் இதயத்தின் அமைதியாய் நின்றவா 220

நெருப்பினைக் கரத்தினில் நிறுத்தியே வைப்பவா 221

வேள்வித்தீ மூட்டலை விரும்பிக் களிப்பவா 222

ஹூம்கார ஒலியால் கம்பளனை ஒழித்தவா 223

பொன்னம் பலத்திலே நடமிடும் புனிதனே 224

கௌரியின் பேச்சிலே களிப்புக்கொள் பாலனே 225

நகர்நடு வாழ்பவா நகர்களின் வேந்தனே 226/227

தில்லை வெளியிலே ஆகாச ரூபனே 228

எந்தப் பூச்சுமிலா இயற்கை அழகனே 229

மாறுதல் இல்லாத நிரந்தர ஜோதியே 230

ஆகாரம் உண்ணாத அருள்உப வாஸியே 231

மோட்சம் அளிப்பதற்கு முன்னாலே வருபவா 232

மாயையை உண்மையை தெள்ளத் தெளிந்தவா 233

ஆளரவம் இல்லாத ஆரண்ய வாஸியே 234

தெற்குத் திசையிலே தரிசனம் தருபவா 235

வேள்விச் சாலையிலே விளங்கிடும் ஐயப்பா 236

யட்ச ராட்சதரை இல்லாமல் செய்பவா 237

குணநலன் கொண்டவா யோகத் தலைவனே 238/239

கூடியே வாழ்பவா கொடியோர் பகைவனே 240/241

நள்ளிரவுத் திருடரை நசுக்கிட வருபவா 242

யமதர்மன் ஆணைபோல் ஆணையிடும் வல்லவா 243

மனோன்மணிச் சக்கரத்தில் மகிழ்ந்தே வாழ்பவா 244

ஹிமவானின் பேரனாய் இன்புற் றிருப்பவா 245

வைசூரி மாரியை வதைத்திடும் ஐயனே 246

கோபமே இல்லாத பொந்தஸ்வ ரூபனே 247

மாந்தாதா மன்னனின் பூஜையை ஏற்றவா 248

காந்தமலை நாயகனே சரணம்பொன் ஐயப்பா

மணிசூலம் கதையானை மனிதன் குதிரை நாய்

அடையாளம் பொறித்திட்ட கோபுரம் கொண்டவா 249

மனோவேகமும் கடந்து நடந்திடும் மன்னவா 250
தேவாதி தேவர்க்கும் மேலான தேவனே 251
மஹேஸ்வர ரூபனே மண்டலம் ஆள்பவா 252
பாண்டியர் பரம்பரைத் தோன்றலே தென்னவா 253
ஹாலாஹலன் தளபதி போற்றிய தலைவனே 254
ஆயுதம் கலப்பைஎன அணிவகுத்த வேந்தனே 255

பலராமன் துதித்திட்ட பந்தள ராஜனே 256

திருமார்பில் குங்குமம் மஞ்சள் அணிந்தவா 257

ஹநுமானின் தோற்றத்தை சிலநேரம் அளிப்பவா 258
ஆஞ்சநேயன் போற்றிய ஆபத் பாந்தவா 259
தங்ககிரி நங்கையை தாங்கிடும் கணவனே 260
ஹிமகிரி முனிவர்கள் சூழ்ந்திடும் தெய்வமே 261
சரத்கால தேவனே ஸரஸ்வதி நாதனே 262/263
மழைக்காலச் சந்திரன்போல் குளிர்முக சீலனே 264

அம்பறாத் தூணியைத் தோளிலே தாங்குவோய் 265
அடைக்கலம் என்போர்க்கு அனைத்தையும் வழங்குவோய் 266

சாஸ்திர பண்டிதா ரிஷப வாகனா 267/268
சயனம் கொள்பவா மங்கள தாண்டவா 269/270
அரக்குமாளிகை விபத்தில் ஐவரைக் காத்தவா 271
அவர்களின் வாழ்த்தினை அன்போடு ஏற்றவா
பாண்டியன் மகளினை பாதுகாத்த ரக்ஷகா 272
பரமசிவன் பாராட்டும் மூன்றாம் பாலாகா 273

தாமஸ குணமதை விரட்டி அடிப்பவா 274
சேவற் கொடியோனை திருப்திப் படுத்துவோய் 275
பானகம் நீர்மோர் பருக விழைபவா 276
மூவடியால் உலகளந்த மூர்த்தியாய் வந்தவா 277
உருவமாய் அருவமாய் இரண்டுமாய் நின்றவா 278
திருவிழா மூன்றுநாள் கொண்டாடு என்றவா 279
வாழ்க எனும் ஒலி சூழ வருபவா
ஜெயஜெய எனும் ஒலி முழங்கிடச் செய்பவா

நமஸ்காரம் என்போர்கள் நாதம் ஒருபுறம்	
மங்களம் உண்டாக என்பவர் ஒருபுறம்	
நல்லோசை பரவுகின்ற ஆலயம் வாழ்பவா	280
நானாவிதத் தோற்றம் நாளும் கொள்பவா	281
வஞ்சக வேடரை வதைத்திடும் ஐயப்பா	282
ஐயப்பா என் போர்க்கு அபயம் அளிப்பவா	283
நாகா சூரனை வதைத்திட்ட நாரணா	284
நாமஸங் கீர்த்தனம் கேட்டு மகிழ்பவா	285
விஷ்ணு உவந்தளித்த விந்தைநிறை மைந்தனே	286
நந்தகோபன் புகழுக்கு காரண கர்த்தனே	287
ஆகமங்கள் போற்றுகின்ற அகிலாண்ட நாயகா	288
மதுக்கிண்ணம் ஏந்தியே மகிழ்ச்சியில் திளைப்பவா	289
மதுராபுரி வாழும் மகிமைப் ப்ரதாபனே	290
பெருங்காட்டு நடுவிலே பீடுநடை போடுவோய்	291
ருத்ராக்ஷ மாலைகளால் மேனி மறைத்தவா	292
விபூதிப் பூச்சினால் வெண்மைவடி வானவா	293
மஹாராயன் என்பவனை மந்திரியாய்க் கொண்டவா	294
பெரும்பெரும் பூதங்கள் சேனையாய்ச் சூழ்ந்தவா	295
மாமுனிவர் துதித்திடும் ஞானியே நல்லவா	296
கடலையும் தாழ்த்திடும் கருணை மனத்தவா	297
நினைத்த கணத்திலே உடன்தோன்றிக் காப்பவா	298
மஹா சாஸ்தாவே மஹாப்ரபு ஐயப்பா	299/300
முந்நூறு திருநாமம் கூறினேன் ஐயப்பா	
முக்காலும் எக்காலும் காப்பாற்று ஐயப்பா	

பலன்

ஸர்வ ரோஹம் நிவாரணம்
கள்ளர் பயம் நீங்கிடும்
புலி அரவம் அடங்கும்
பூதம் பிசாசு ஒடுங்கும்

ஆயுள் ஆரோக்யம் ஓங்கும்
அஷ்ட ஐஸ்வர்யம் கிட்டும்
பால தோஷம் போகும்
விவாஹம் கை கடடும்

ஞாயிறு செவ்வாய் நாட்கள்
அஷ்டமி பௌர்ணமி திதிகள்
நதிக்கரை ஜெயபம் விஷேஷம்
எதனிலும் ஜெயம் நிச்சயம்

சூலம் வில்லம்பு ஏந்தி
யானைமேல் வரும் தேவன்
ஸ்ரீ மஹா சாஸ்தா நாமம்
தித்திக்கும் தேனாம் ருதம்

சாமியே சரணம் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ தர்மசாஸ்தா சகஸ்ரநாமம்

தமிழாக்கம்

ஸ்வாமியே சரணம் ஐயப்பா!

ஜெயஜெய மங்கள சாஸ்தா சரணம் 1
சிவபெரு மானின் செல்வா சரணம்
நிகரிலா வீரா தீரா சரணம்
ஒளியே வடிவாய் திகழ்வாய் சரணம் 2
பரமனின் ஆணையை ஏற்பாய் சரணம் 3
பரமனை மகிழ்விக்கும் பாலா சரணம் 4
சிவனை த்யானிக்கும் ஞானியே சரணம் 5
சிவனின் திருப்பணிக் காவல சரணம் 6
திருச்சங்கு முழாங்கிடும் வனபதி சரணம் 7
தேவர்கள் போற்றிடும் சுரபதி சரணம் 8
பிறைமதி சூடிய பெருமா சரணம் 9
அமரரில் உயர்ந்தோய் அரியோய் சரணம் 10
மன்மதன் வழிபடும் மகிமையோய் சரணம் 11
மன்மதனை நிகர் சௌந்தர்ய சரணம் 12
அறம்பொருள் இன்பம் அளிப்போய் சரணம்
முடிவினில் மோட்சமும் அருள்வோய் சரணம் 13
கல்யாண குணங்கள் நிறைந்தோய் சரணம் 14
கண்ணுக்கு இனிய கனியே சரணம் 15
தடைப்படும் திருமணம் நடத்துவோய் சரணம் 16
தயா... சாகரமே தலைவா சரணம் 17
உலகியல் செயல்பட உதவுவோய் சரணம் 18
நவரச நடுநிலை சாந்தனே சரணம் 19
உயிர்க ளிடத்தில் அன்பா சரணம் 20
உயிர்க்குலம் காக்கும் அருளாள சரணம் 21

உலகுக்கு ஆனந்தம் தருவாய் சரணம்	22
ஜெயவிஜ யைதுதி பெறுவாய் சரணம்	23
ஜனங்களின் மகிழ்ச்சியில் திளைப்பாய் சரணம்	24
ஜெயமே லட்சியம் என்பாய் சரணம்	25
பொறிகளை அடக்கிய புனிதா சரணம்	26
சினத்தை தேய்த்த செம்மலே சரணம்	27
அரக்கரை அகற்றும் செருக்கோய் சரணம்	28
ஜைமினி முனிவரர் தெய்வமே சரணம்	29
நரைதிரை மூப்பை நசிப்போய் சரணம்	30
மரணத்தை விரட்டும் மஹிபா சரணம்	31
திருமால் செல்வப் புதல்வா சரணம்	
மோஹினி விரும்பும் முதல்வா சரணம்	32
பெரியண்ணன் சேவிக்கும் பெரியோய் சரணம்	33
பிறவியே இல்லாப் பெற்றியோய் சரணம்	34
ஆமோஹ அசுரனை வதைத்தோய் சரணம்	35
மோஹத்தை வென்ற முனிவா சரணம்	36
மிதிலா நகரின் காவல சரணம்	37
பந்தள மன்னனின் குருவே சரணம்	38
உன்னத நிலையோய் உயர்ந்தோய் சரணம்	39
விலங்கும் பசுவும் விரும்புவோய் சரணம்	40
கமல மலரோன் கடவுளே சரணம்	41
திரிபுரம் எரித்த சிவ ரூபி சரணம்	42
அடியார் எதிரே வருவோய் சரணம்	43
ஐஸ்வர்யம் யாவும் தருவோய் சரணம்	44
வாயு வணங்கும் வள்ளலே சரணம்	43
ஐந்து மந்திரம் ஜபிப்போய் சரணம்	44
பார்வதி அருளிய பாலா சரணம்	45
பரப்ரம்ம ரூபனே ஐயப்பா சரணம்	46
பரமா னந்தப் பாங்கே சரணம்	47
பெரிதினும் பெரிய பொருளே சரணம்	48

ப்ரம்மத்தில் இரண்டறக் கலந்தோய் சரணம்
பூர்ணா தேவியின் காந்தா சரணம் 49
ஞானப் பழமே குணநிதி சரணம் 50,53
முக்குணம் ஏற்பாய் விடுவாய் சரணம் 51
குணங்களை அறிவாய் ஆயனே சரணம் 52,55
கோபாலன் பூஜிக்கும் கோமானே சரணம் 54,55
யானை வாஹன மோஹன சரணம் 57
விநாயகப் ப்ரிய கஜக்ரிவ சரணம் 58,59
யானையின் தோள்வலி கொண்டோய் சரணம் 60
சூரிய வடிவே சுடரே சரணம் 61
கோபதி ப்ரபு கதிரவ சரணம் 62,63,70
சிற்றூர்க் காவல ஜடாதர சரணம் 64,71
வேழப் படையின் வேந்தே சரணம் 65
அஷ்டதிக் கஜங்களின் அரசே சரணம் 66
கணங்களின் வேந்தே பசுபதி சரணம் 68,69
கணங்களை இயக்கும் கதியே சரணம் 67
நீராய் நெகிழ்வோய் நிர்மல சரணம் 72
செந்நிற விழிகொண்ட தேவனே சரணம் 75
ஜைமினி மறையோர் ஜபமே சரணம் 73
ஜலந்தர அசுரனின் சத்ருவே சரணம் 74
செந்நிற உடையோய் கதிரொளி சரணம் 76,80
தேவர்கள் புகழும் மேலோய் சரணம் 81,77
துயர்களை வோய், அருள் விழியோய் சரணம் 78,79
அமரர் வணங்கும் நல்லொளி சரணம் 82,85
சல்மலி மரத்தின் சத்தே சரணம் 84
செந்நிற அவயவத் திருவே சரணம் 83
வில்லாளி வீரனே மணிகண்ட சரணம் 86
சரத்காலச் சந்திர முகத்தோய் சரணம் 87
ஸனகாதி முனிவோர் தொழுவோய் சரணம் 88
சகல ஞானமும் ஈவோய் சரணம் 89

எங்கும் நிறைந்தாய் ஹரியே சரணம்	90,94
அன்னம் போன்றாய் தூயவ சரணம்	92,98
கலப்பை ஏந்தியோய் கழலடி சரணம்	91
சிவனிடம் அன்பு செலுத்துவோய் சரணம்	95
ஹாஹா ஹூஹூ ஒலிகளி னாலே	
கந்தர்வர் போற்றும் காந்தமே சரணம்	93
சந்யாசித் தோற்றம் தருவோய் சரணம்	96
சிம்மா சனத்தில் மேர்ந்தோய் சரணம்	97
அக்கினி போன்றாய் ஐயனே சரணம்	99
பக்தர்கள் பாவம் போக்குவாய் சரணம்	100
திருநீ றணிந்த திவ்யனே சரணம்	101
அச்சம் நீக்கி அணைப்பாய் சரணம்	102
ஒளிக்கதிர் மேனி முக்கண்ண சரணம்	103,106
ஆபத்பாந்தவ தசமுக சரணம்	104,114
முப்பட்டடை நீற்று முகத்தோய் சரணம்	105
திருநீறு மணக்கும் சிரத்தோய் சரணம்	107
அமரரில் உயர்ந்தோய் தளபதி சரணம்	109,111
அசுரரைத் தேய்த்தோய் கொடியோய் சரணம்	110,115
திரிபுரம் எரித்தோய் ஒளியோய் சரணம்	108,112
ஒளிக்கும் ஒளியோய் பூபதி சரணம்	113,120
தோஷம் நீக்கும் சுடரே சரணம்	116
தண்டனை அளிக்கும் சத்யா சரணம்	118
கோல்போல் கரத்தோய் நெடியோய் சரணம்	117,130
வில்வித்தை நிபுணனே வில்லாளி சரணம்	125,119
ஐஸ்வர்யம் அளிப்பாய் அறவாழி சரணம்	121,123
அறங்கள் காக்கும் தர்மா சரணம்	122,124
வளமார் செவி விழி வல்லோய் சரணம்	126,128,127
செழுமைக் கரத்தோய் திவ்யா சரணம்	129
ஒருகணம் நினைந்து உருகினால் போதும்	131
மறுகணம் தரிசனம் தருவோய் சரணம்	132

தாரக மந்திரம் ஆனாய் சரணம்	133
தேஜஸை விளக்கும் தேவனே சரணம்	134,136
யோக குருவே யோகியே சரணம்	135,137
யோக நிதியே யோக நிலையை	138,139
மந்தார வனத்தில் மமதைக் களிப்பொடு	
மந்தாரப் பூவாய் மலர்வாய் சரணம்	141
மலைய மலையில் மலைய மாருதம்	140,142
வந்து வணங்கும் சுடரே சரணம்	143
பரந்த மார்பா பெரிய சரீரா	144,147
பெருவிழி கொண்டோய் நெடியோய் சரணம்	148,146
அகன்ற தாடை அழகா சரணம்	149
காற்றும் வணங்கும் பூஜ்யா சரணம்	150
சுவைமிகு பொருள்கள் வணங்கும் மனோஹர	145
சுந்தர மோஹன சாஸ்தா சரணம்	152
மானமே பெரிதென மதிப்போய் சரணம்	151
மோக்ஷ ராஜ்யம் அளிப்போய் சரணம்	153
தோன்றாத் துணையாம் சூர்யா சரணம்	154
மேதா வீர்யா பண்டிதா சரணம்	155,156,159
மாரியைப் பொழிவிக்கும் ஆரிய சரணம்	157
நேரில் பேசும் தெய்வமே சரணம்	158
சூரிய தேஜஸ் சுடரே சரணம்	160,161
பவானி புதல்வா பதமலர் சரணம்	162
பிணிதீர்க்கும் மருத்துவ முக்கண்ண சரணம்	163,169
ஸம்ஸார பந்தங்கள் தகர்ப்போய் சரணம்	164
கருநீல வண்ணம் காட்டுவோய் சரணம்	165,166
கருங்கழுத் துடையோய் நிரஞ்ஜன சரணம்	167,168
வேடர்கள் குலத்தின் விளக்கே சரணம்	170
நவமணி ஆரங்கள் அணிந்தோய் சரணம்	171
மாணிக்க ஒளிதிகழ் மேனியோய் சரணம்	172
லக்ஷ்மி குமாரா ஐயப்பா சரணம்	173

லக்ஷ்மியின் அன்பில் நனைந்தோய் சரணம்	174
அரசர்கள் பூஜிக்கும் ரமணா சரணம்	175,178
ராஜ குலதனம் ராக்ஷஸர் பகையே	176,180
கதாயுதம் ஏந்தும் ஈசான சரணம்	177,181
ரேணுகை வழிபடும் தேவனே சரணம்	179
யானை சேனை ஆள்பவா சரணம்	182
மண், பொன் பெண்ணாசை மாற்று வாய் சரணம்	183
இடா நாடியிலே இருப்போய் சரணம்	184
தங்கநிற மண்டபத்துத் தங்கமே சரணம்	186,185
சைவ வைஷ்ணவ சைதன்ய சரணம்	187
ஆத்ம ஸ்வரூபனே ஹம்ஸ சரணம்	188
ஹயக்ரீவ உருவே பரிப்ரிய சரணம்	189,190
தங்கத்தில் பதித்த ஸ்படிகமே சரணம்	191
நான்முகன் ஸேவிக்கும் நல்லோய் சரணம்	192
வனங்களுக் கரசே வனவாஸி சரணம்	194,193
இடப்புறம் தேவரை ரட்சிப்பாய் சரணம்	195
புனித முகம் கொண்ட புண்ணியா சரணம்	196
சனிபனி வான் யமன் தலைவனே சரணம்	197
விஷ்ணுவாய் எங்கும் விரிவோய் சரணம்	198
பேரண்ட உருவாம் பெரியோய் சரணம்	199
அனைவரும் அறிந்த ஆண்டவா சரணம்	200
புல்லாங் குழல் ஊதும் பூமானே சரணம்	201
எழிலிசேர் நெடிய மணிகண்டா சரணம்	202,205
வரம்அபி யம்தரும் கரத்தோய் சரணம்	203
ஒளியோய் நீள்விழி உடையோய் சரணம்	204,206
வினோதா வேணுவனப்ரிய சரணம்	207,208
வாம தேவரின் குருவே சரணம்	209
சாட்டையைக் கையினில் தரித்தோய் சரணம்	210
பலப்பல உருவங்கொள் பாலா சரணம்	211
குலவிளக் கெனவே ஒளிர்வோய் சரணம்	212

பரிவாரப் படைகள் சூழ்வோய் சரணம்	213
ஹ்ரீம் பீஜம் கொண்டோய் ஹ்ரீம் நேசா சரணம்	214,215
பொன்மய ரூபா சந்தோஷா சரணம்	217,216
சிவ வீர்யம் தன்னில் ஜனித்தோய் சரணம்	218
ஹோம த்ரவ்யம் ஏற்போய் சரணம்	219
வேள்வியை நிறைவுசெய் வித்தகா சரணம்	220
ஹூம் கார வீரரின் வேந்தே சரணம்	221
யாக ஹவிஸ்ஸனை சுவைப்போய் சரணம்	222
வேள்விப் பொருள்களை ஏந்தியோய் சரணம்	223
அட்டகாச சிரிப்பு ஐயப்பா சரணம்	224
வெல்ல முடியாத வீரனே சரணம்	225
அணுரூப மான ஐயனே சரணம்	226
மூப்பற்ற முதலே தோற்றம் தருவோய்	228,227
ஆகாய ரூபனே ஹம்ஸமந்த்ர குருவே	229,230
அக்னியில் வருவோய் பொன்னாடை தரிந்தோய்	231,232
அழகுக்கு அழகே ஹரிஹர சுதனே	233
கடம்ப மலர் அணியும் நீலனின் தோழா	235
நிதிகாப் பாளா தவசீலா சரணம்	236,240
தோப்பினில் உறைவோய் முனிவரைக் காப்போய்	237,239
மார்பில்கை ஊன்றிய யோஹியே சரணம்	238
வஸந்த விழாவினில் வருவோய் சரணம்	241
வைத்ய ஸ்ரேஷ்டனே மானியே சரணம்	242,243
மந்திர ரூபா மகிழ்ச்சியின் பெருக்கே	244,245
மனுவே மேதையே ஞானியே சரணம்	246,247,248
துஷ்டரின் செல்வம் பறிப்போய் சரணம்	249
மகர ராசியின் மன்னனே சரணம்	250
கடலும் நீயே கதிரவன் நியே	251,252
மேகம் போன்ற சடையோய் சரணம்	253
திங்கள் தோறும் செய்யத் தகுந்த	
காரியம் எதற்கும் கைகொடுப் பாயே	254

பிறவிப் பிணிதீர்க்கும் பெருவைத் தியனே	255
நான்மறை கற்றோய் சுயம்பாம் ஜோதியே	256,257
காலைக் கதிரொளி ஸவிதா சரணம்	258
யாவர்க்கும் குருவே ஐயப்பா சரணம்	259
பூர்ண சந்திரப் புன்னகை கொண்டோய்	260
பொறுமை சக்தி குளிர்மதி மேனி	261,262,263
தேவருக் கிணையோய் அவரினும் உயர்ந்தோய்	264
கூரிய எழிற்பல் மோவாய் அமைந்தோய்	265,266
ஆறெழுத் ததனில் மந்திரம் அமைத்தாய்	267
மாபெருஞ் செல்வா வாரிசாய் வந்தாய்	268
பகைவர்க்கு விஷமென வடிவம் காட்டும்	269
கறுத்த நெஞ்சோய் காளையே சரணம்	270
ஐம்புலன் அடக்கியே ஆள்வோய் சரணம்	271
கோமுக த்வாரத்தில் அமர்வோய் சரணம்	272
விச்வா மித்ரரின் குருவே சரணம்	273
காலங்கள் அனைத்திற்கும் கடவுளே சரணம்	274
இருநரி ழிகைவழி இருப்போய் சரணம்	275
க்ரௌஞ்ச மலையைப் பிளந்தோய் சரணம்	276
சகல காரியமும் சாதிப்போய் சரணம்	277
தயையின் வடிவே சாஸ்தா சரணம்	278
அரளிப் பூப்போல் விரல்கள் கொண்டோய்	279
விரும்பிய தருவோய் கபாலம் தரித்தோய்	281,282
காமனின் ஆணவம் நீக்கிய தேவா	280
கைலாஸ வாஸா வரம்தரும் ஈஸா	283,284
பேரொளி பொழிவோய் முச்சுடர் உருவோய்	285,286
கீரி வாஹனா பலன் அவன் தலைவா	287,288
ரத்னம் கக்கும் நாகா பரணா	289
சுந்தரா ஸுமுகா தூயோய் சரணம்	290,291,292
சபா நாயகா சபைஅலங் காரா	293,294
அவுணர் பாணம் துளையா மார்பா	295

கூரிய எகிறும் நீண்ட நாவும்	298,299
பொன்னிற விழிகளும் மன்னிய வடிவா	300
சங்கா தேவியின் நண்பா ரக்ஷகா	296,297
பூத பிசாசங்கள் ஓடிடச் செய்பவா	301
பிளக்க முடியாத பெரும்பொருள் நீயே	302
தோள்வளை பூண்டோய் பூதேவ சரணம்	303,305
நைவேத்யம் அளிப்பார் நலனில் களிப்பாய்	304
அதர்மத்தைக் கண்டால் அசூயை கொள்வாய்	307
கழுகு நாசிய விஸ்வ ரூபி	306,308
தரித்திரம் நீக்கும் பவித்ர சரணம்	309
வதனம் அதனில் படபாக்னி வீசும்	310
நஞ்சைப் போக்கும் நாயக சரணம்	312
ஹஸந்தம் என்னும் ஆயுத பாணி	313
எங்கும் தங்கும் ஸ்வாமி சரணம்	311
உத்தமா கர்வி யுத்தத்தில் திளைப்பாய்	315,317,314
பத்மம் மேவும் பாம்பணி நாதா	316,319
நிச்சயம் செய்து கட்டளை இடுவோய்	318
நர்த்தனம் செய்யும் பரத பைரவ	320,321
உழைப்புக்கு ஊதியம் கொடுப்போய் சரணம்	322
வாமன னாக வருவோய் சரணம்	323
சிம்ம முகத்தோய் சிம்ம உருவோய்	324,325
தேவஸே னாபதி ஆதித்ய சரணம்	326,331
பெயரும் வினையும் நீயே சரணம்	327
ஸநாதன முனியாய் தண்ணருள் பொழிவோய்	328
நித்தர்க ளிடத்தில் சித்தம் வைத்தோய்	329
சித்தர்கள் தர்மம் கடைப்பிடிப் போயே	330
ஆபத் பாந்தவ அமுதக் கடலோய்	332,333
இளைய ராஜனே சிறந்த யோகி	334,335
விடியல் உஷையே விண்மீன் ஒளியே	336,337
தேவாதி தேவா ஜோதிட சரணம்	338,339

செவ்விதழ் பொன்மயச் செவ்விழி கொண்டோய்	340,342,341
மல்லிகை, நாகம், ரத்தினம், அணிந்தோய்	343,345,344
போக முனிவர் உருவம் தோற்றுவோய்	346
போகர் மகிழ ஆனந்தம் ஊட்டுவோய்	347
பயமே இல்லோய் படைப்பாய் யாவும்	348,351
வேழமும் காமனும் வேண்டிட வருவோய்	349,350
சர்வமும் நீயே ஒளிமய மானாய்	352,353
எல்லாம் வழங்கிய சந்யாசி சரணம்	354
சுதந்திரன் நீதான் இனிய கவிஞன்	355,356
சந்த சாஸ்திரம் கற்றோன் தயாளன்	357
தேவ மனுவின் நாதன் பத்தெனும்	358
ஆகார வகையில் ஆர்வம் கொண்டோன்	359
தளன்உன் தளபதி தானவர் பகைநீ	360,361
சகஸ்ர விழிகள் அமைந்தோய் சரணம்	362
நூறு மடங்கு ஆனந்தம் அளிப்போய்	364
நூறு வடிவம் எடுப்போய் சரணம்	363
லக்ஷ்மி நாராயணர் தரிசனம் காண்பாய்	365
கருட கிரியில் காட்சி கொடுப்பாய்	366
கம்பீர னே, நல் கந்தம் நுகர்வோய்	367,368
இந்த்ரிய ஈஸா கண்டகீ வாஸா	369,370
கோமேதப் ப்ரியா ஆயனே மாயா	371,372
மண்டலம் பூண்டோய் சொல்லின் செல்வா	373,374
தினைவிளை வயலில் காவல் புரிவோய்	375
இதயக் குகையில் இருப்போய் சரணம்	376
உயர்குரு நாதா வணக்கத்திற்க உரியோய்	377,378
கொடையாளி நீயே அழகின் நிறைவே	379,380
குழலூ திடுவாய் விணை மீட்டுவாய்	381,382
தீவினை நீக்கும் ஒளிக்கணத் தலைவா	383,387
ஹைமிலி மரத்தில் அவதரித் தாயே	384
யாகம்செய் வோர்க்கு மங்களம் ஈவோய்	385

ரிக்வேத பண்டிதா பூத நாதா	386
புத்திரப் பேறு நல்குவோய் சரணம்	389
தண்டனைக் கொன்றோய் மறைந்திருப் பவனே	390,391
அரைஇமை நொடிக்குள் அனைத்தும் அறிவோய்	392
வாயுரூபி காலத்தை அளப்போய்	388,393
மஞ்சள் மேனி அங்கங்கள் நெருங்க	394,395
அடியார்க்கு வரங்கள் அளிப்பதில் வல்லோய்	397
திருமகள் வணங்கும் செல்வா சரணம்	396
இடா பிங்களா நாடியை அடக்கி	398,399
சுழிமுனை நாடியைத் தொடர்வோய் சரணம்	400
அச்சம் கொடுக்கும் ஒளிச்சுடர் படைப்போய்	402
பிட்சா டனனே பெரும்புகழ் கொண்டோய்	401,403
சபேஸ் வரனே சங்க நிதியோய்	404,406
வாக்குமனம் கடந்த வள்ளால் சரணம்	405,409
தமையன் இருக்க திருமணம் முடித்தோய்	407
எதிலும் உறுதியோய் அழியாப் பொருளே	408,410
வேஷப் ப்ரியனே வனநா யகனே	412,415
அநகே சூரிய ஒளியோய் சரணம்	411
கால கூடவிஷம் கரத்தில் எடுத்தோய்	413
கேட்டதைக் கொடுக்கும் கீர்த்திய போற்றி	414
வேதம் கூறும் மெய்ப்பொருள் ஆவாய்	416
உபநிஷ தம்புகழ் உயர்பரம் பரையோய்	417,423
எளிதில் அடையா மலைமேல் இருப்போய்	418
அரிதில் அறியும் சொற்கள் புகல்வோய்	419
வலிவை அளிப்போய் வைரம் போன்றோய்	420,422
விமான மண்டபம் வீற்றிருப் போயே	421
குழந்தைகள் நலத்தில் குறியாய் இருப்போய்	424
நதிக்கரை யினிலே ஆடி மகிழ்வோய்	425
அந்தணர்க் குகந்தோய் பன்றிப் படையோய்	426,429
கடலலை போலே கேசம் உடையோய்	427,428

வராஹ வேட்டையில் சிவனின் துணையாய்	430
பேரொலி கிளப்பி செயலாற் றிடுவாய்	431,435
கஞ்சபீட யக்ஷிகள் சூழ	
செந்தா மரையினில் விளையா பிடுவாய்	433
வண்ண ஆடை கபாலம் தரித்தோய்	434,432
சூலம் ஏந்தி தீயரை அழிப்போய்	438,440
செயல்செய அருள்வாய் இருமைல் அளவாய்	436
தோற்றம் அளிப்பாய் தோண்டிடு வாயே	439,441
விளையா டல்களின் தலைவன் நீயே	437
யாகம்செய் வோரிடம் பங்குகேட் பாயே	442
ஆகாயம் அமர்வோய் வானில் திரிவோய்	443,444
பறவை உருவாய் மகிழ்வாய் நீயே	445,446
குணதோஷம் இல்லாய் குணமே இல்லாய்	447,448
குசம்எனும் தீவுக்கு அதிபதி சரணம்	449
பாதிரிப் பூவின் வண்ணம் கொண்டோய்	450
இலைகளை உடையாய் உடுப்போய் சரணம்	451
பாலை, புரசம் சூழ வாழ்வாய்	452
சிவனைப் போலவே சீலம் கொண்டாய்	454
ஆண்மகவு அளிப்பாய் இந்த்ராணி கவலை	453
தீர்த்தாய் சமர்த்தாய் செயல்கள் செய்வாய்	457,463
நெற்றிக் கண்ணோய் விரிமலர்க் கடந்தல்	458
கற்றைச் சடையாய் கைபிசை மறவனே	459,455
செங்கழு நீர்ப்பூ சிரத்தில் அணிவாய்	460
நாகங்கள் வணங்க சாமரம் வீச	461,471
விழிகளைச் சுழற்றும் திருடன் போல்வாய்	470,467
வயதில் பெரியோன் என்பது போல	
திடுமெனத் தோன்றி மறைவாய் நடிப்பாய்	465,466
திருட்டை விளக்கித் திருடரைக் கொல்வாய்	469,468
குத்துக் காலிட்ட கோலம் யோகம்	
சுற்றிக் கட்டிய கச்சை உங்கள்	

பந்தம் அகற்றி எந்தன் வசமாய்	
சொந்தம் ஆக்கிக் கொண்டேன் என்னுமோ	462
பாவம் யாவும் சாம்பல் ஆக்கும்	456
வாக்கில் வல்லாய் மெல்லச் செல்வாய்	464,473
குளிரும் ஒளியோய் மிளகுப் ப்ரியனே	474,472
மேஷ வாஹன சரணம் சரணம்	475
கட்டுக்கள் அகற்றும் மனோ ரூபனே	477,478
மந்த்ர வடிவனே மந்த்ர தேவனே	479,480
மந்திரக் கூட்டத் தலைவா சரணம்	481
மிதிலா நகரில் உறைவாய் சரணம்	476
மிகுபலம் கொண்டோய் உயர்நிலை அறிந்தோய்	482,483
பவக்கடல் தாண்ட உதவிடும் வள்ளலே	486,484
தேவர் வணங்கும் யாகப் ப்ரியனே	485
எமன் முன்நின்று எமபயம் தடுப்போய்	488
யானைக் காவல யானையோ டாடிடும்	489,490
பாலக தருக்களின் வளர்ச்சியில் ஆவல	493
யாரும் தாக்கிட இயலா சக்திமான்	492
தானவர் பகைநீ தாமோ தரனே	494,495
சட்சிணா மூர்த்தி இந்நதராணி பூஜையில்	497,498
வந்தே அருளும் சங்குச் செவியோய்	499
பிறைமதி அணிவாய் தயிர்அளை கரத்தோய்	500,491
கயிறு தரித்தோய் கழலடி சரணம்	496
வேத மந்திரம் கேட்க விரும்புவோய்	501
வெல்லமரிய இனிக்கும் கொள்ளை வனப்பினோய்	502
அவரவர் குலஅறம் சரிவர நடத்துவோய்	503
அர்ஜுனன் எனவே அழைத்திடப் பெறுவோய்	504
கறுத்த கழுத்துடன் கனத்த மேனியோய்	505,506
ரேக்கன் கோத்ரனை அழிக்கும் ஆற்றலோய்	507
குலத்தைக் காத்திடும் குடும்பத் தலைமையோய்	508
குளத்துப் புழையனே சரணம் சரணமே	

ஆனந்த பைரவர் அர்ச்சனை ஏற்பாய்	509
தேவேந்த்ர பதவியை தேடித் தருவாய்	510
சர்க்கரைப் பொங்கல் சுவைத்திட வருவாய்	511
தயிரன்னம் அதனை உண்டிட விரைவாய்	512
நெய்யது வழியும் அமுதினை ஏற்பாய்	513
நீல வானமாய் தோற்றம் அளிப்பாய்	517
அங்கம் எல்லாம் தங்க மயமாய்	
பொன்ஜயன் என்றே போற்றப் பெறுவாய்	514
கர்வம் அகற்றுவாய் கணங்களின் தலைவா	515,518
கணபதி வழிபடும் கபடம் இல்லாய்	516,520
யீநலவின் வெண்மை நித்திலப் பற்கள்	521
சாந்த குணத்தின் தன்மைய சரணம்	525
சராசரம் யாவும் உந்தன் மயமே	524
சரபம் சதாதபர் வடிவுகள் நீயே	526,527
அங்கிரஸ் முனிவர் அவரும் நீயே	523
எங்களை என்றும் ஆதரிப் பாயே	
வீரரின் பூஜையை விரும்பி ஏற்போய்	528
நால்வகைப் படையையும் நடத்துவோய் நீயே	530
வேதம் போற்றும் வித்தகன் நீயே	531
கோணல் நடையோய் குன்றேறு வாயே	529,532
மேலாம் இறைவா கதிரவா சரணம்	534,533
பிரம்ம ரூபா பிறர்கருத் தறிவோய்	535,536
சம்சாரப் பிணியைத் தகர்ப்போய் சரணம்	537
பவக்கடல் தாண்டப் பதமலக் தருவாய்	538
ஞானாக்னி தவழும் ஞான ரூபா	539,540
ஞானா னந்தா ஞானியே சரணம்	541,542
நாட்டியப் பிரியா நரபதி சரணம்	543,544
நர நா ராயணர் கடவுளே சரணம்	545
வேடர் தலைவா மூடு பனியோய்	546,547
நேஷ்டா எனப்பெறும் யாக ரூபா	548

சொல்லம் பாலே எதிரியைச் சுடுவோய்	549
பள்ளம் பதுங்கும் வில்லாளி வீரா	550
நீல நேத்ரா நீல கேசா	551,553
நீல அவயவ நேர்த்தி கொண்டோய்	552
சிம்ம விழியோய் இரவின் ஈசா	554,558
ஆறு முகத்தோய் அழகா சரணம்	559,560
காட்சிக் கெளியோய் கச்சை அணிந்தோய்	561,568
ஸாமம் ஓதும் ஸாஸ்தா சரணம்	556
ஸனக்ர் ஆதி முனிவர் வணங்கும்	557
தடையை நீக்கும் படையோய் சரணம்	555
இந்திர பூஜை ஏற்பாய் சரணம்	563
ஸ்வர்க்கம் நல்கும் சுந்தர சரணம்	562
காகி னிஅவளின் கணவா சரணம்	564
காமனை எரித்த கண்ணியா சரணம்	565
பாவம் போக்கும் பவித்ர சரணம்	566
பூமி, மலைகளின் அதிபா சரணம்	567
நூறு மனைவியர் துணைவா சரணம்	569
தந்த்ர நூலோர் தலைவா சரணம்	570
ப்ரணவ உருவே அருளே சரணம்	571
தாமரை மணிஅணி சாஸ்தா சரணம்	572
முல்லைப் பூப்போல் பல்லோய் சரணம்	573
எள்ளு போன்ற வயிறோய் சரணம்	575
பொருத்த தொந்தி உடையோய் சரணம்	579
எள்ளும் தேனும் சுவைப்போய் சரணம்	574,584
மகர குண்டலச் செவியோய் சரணம்	576
பொறுமை அணியை பூண்டோய் சரணம்	577
மேரு மலையில் வாழ்வோய் சரணம்	578
மார்த்தாண்ட பைரவர் தலைவா சரணம்	580
ரத்ன மணியின் நிறத்தோய் சரணம்	581
காற்றை ஆளும் கலைஞனே சரணம்	582

உளுந்து தான்யம் உவப்போய் சரணம்	583
மதுவில் நாட்டம் உடையோய் சரணம்	584
பதுமக் கரத்தோய் மாவா சரணம்	585,588
மோகினி பதியே ஸவிதா சரணம்	586,604
மஹா காமேசன் விழிஎன வந்தாய்	587
மதப் பெருமிதம் உடையோய் சரணம்	589
ஆறா தாரம் அதனில் உறைவோய்	590,592,596,598
மூல மந்திர ரூபா சரணம்	591
சுகமே வாழ்வு சுகமே சொற்கள்	593,594
ஸ்ருவக் கரண்டி தாங்கியோய் சரணம்	595
மஹா பைரவர் வணங்கும் மஹிபா	597
ஹ்ரீம்எனின் இன்புறும் இனியோய் சரணம்	599
ப்ளூகனை அணைக்கும் புனிதா சரணம்	601
பரத்வாஜர் போற்றும் பண்பா சரணம்	602
ஸாம்வாசக முகுந்தா தன்யா	605,606,610
குணங்கள் கடந்தோய் கொடையோய் சரணம்	607,614
குணசரி லிகளின் ஆரா தனையொடு	608
ஆசிகளும் பெறும் அன்பா சரணம்	609
தனவா னாகி தனத்தை வழங்கி	611,613
கெட்டதை அழிக்கும் கீர்த்தியோய் சரணம்	612
மஹத்தையும் கடந்தோய் மாயை இல்லோய்	615,616
மகிழ்வொடு மக்கள் போற்றிடும் தலைவா	617
மடாதி பதியே மோக்ஷ சகாயா	618,619
மதம் கொண் டோரை அடக்கிடும் சூரா	620
பிங்கள ஆண்டின் அதிதே வதைநீ	621
மணிமகு டத்தில் பீலி அணிந்தோய்	622
இறைச்சி உன் போரை எச்சரிப் பாயே	623
பாயஸப் பிரியனே நான்முக சரணம்	624,628
பருவம் பட்சம் மாதம் இவையென	625
காலத்தைக் கணிக்கும் கதியே சரணம்	

வயிரம் பூண்டோய் வஜ்ர தேஹா	626,627
மாலைகள் அணியும் மலர்ந்த மார்பா	630,629
தம வாத் யத்தால் சத்ருவைக் கொல்வோய்	633
சரணம்என் பாரைக் காத்திட வல்லோய்	634
கர்விகள் கர்வம் பொடிபடச் செய்வோய்	632
விஸ்வ ரூபம் எடுப்போய் சரணம்	631
க்ரீஷ்ம காலத்துத் தேவதை நீயே	635
த்ரோணரின் கும்ப அபிஷேகம் ஏற்பாய்	636
த்ரோகிகள் எவரையும் துரத்தி அடிப்பாய்	637
பகைவரை ஜுரத்தால் பீடித்து அழிப்பாய்	638
தேவேந்த் ரனுக்கு வரம்பல அளித்தாய்	639
சம்ஸார பந்தத் தளையை அறுப்பாய்	640
லாகினி ஹாகினி மருவும் மணாளா	641
உப்புக் கடலைக் கடந்திட வல்லோய்	642
காகினி சக்தியின் கண்கவர் நேசா	643
கால பாசமும் ஓடச்செய் தீரா	644
கர்ம வினைஎலாம் கழற்றிடும் அன்பா	645
கட்டுக்கள் அகற்றும் உற்றவர் நண்பா	646
மோகம் அற்றோய் மாபெரும் தேகா	647,649
நாசம் இல்லோய் நாசம் செய்வோய்	650,652
கதிரவன் வழிபடும் ரகசிய பூஜை	648
எதிர்வந்து ஏற்போய் தேஜஸ சரணம்	654
அக்ரூ ரருக்கு வரங்கள் அளித்தோய்	651
விசுத்தியில் டாகினி சக்தியை அணைத்தோய்	653
கணிகளுக் கெல்லாம் அணிசெய் பவனே	655
செயல்களை எல்லாம் சீர்செய் பவனே	658
சன்மார்க்கம் போதிக்கும் சற்குரு நாதா	656
தட்சிணா மூர்த்தியின் உருவம் கொண்டோய்	659
சுதந்திரச் சுடரே சச்சிதா னந்தா	657,660
ப்ரேம ரூபா பரியா சரணம்	661,662

மாயா உலகை படைப்பாய் நீயே	663
மோக்ஷ உலகும் கொடுப்பவன் நீயே	664
ஞான வழியைக் காட்டும் நாதா	665
ஞானமே வாழ்வென நவிலும் வேதா	666
செயலுக்கு விளைவை வகுக்கும் தேவா	667
செல்லும் வழிக்குத் துணையாய் வாவா	668
கம் பலனில் சம்மந்தம் உடையோய்	669
மஹா புத்தனே சுத்தனே சரணம்	670,671
கிளிநிறம் கொண்டோய் கிளியின் உருவாம்	672
சுக முனி வர்மகிழ் ஸோமப் பிரியனே	673,674
அமரர்கள் துதிகளில் அகமகிழ் வோயே	675
பருவங்கள் தோறும் பூஜைகள் ஏற்பாய்	676
அஜபா மந்திர வடிவம் நீயே	677
ஹம்ஸ குருவாய் விளங்குவோய் நீயே	678
பலராமன் வணங்கும் தெய்வம் நீயே	679
அனைவ ராலும் அர்ச்சிக்கப் பெறுவோய்	680
வீர வேஷ தாரி நீயே	683
வாக்க வல்லோய் ஈர்க்கும் நல்லோய்	682,681
சந்திர னிடத்தில் சந்தோஷம் கொள்வாய்	684
லாஸ்ய நடனத்தில் மிகமகிழ் வோயே	685
மறைத்தல் தொழிலை சிறப்புற நடத்துவாய்	686
ராப நஷ்டத்தை தள்ளிவைப் போயே	687
ஐம்முகம் கொண்டோய் ஐவரின் குருவே	688,689
ஐந்து வேள்வியின் பலனை அளிப்போய்	690
கோடரி ஆயுதம் ஏந்தி வருவோய்	691
தீயின் இறைவா இடிக்குர லோயே	692,693
பாவிகள் பகையே பாவம் அற்றோய்	694,702
பாவம் களைவோய் மக்கள் தலைவா	697,696
கர்மா அற்றோய் வஞ்சனை அற்றோய்	698,699
கருணையின் பெருக்கே சமரஸ தேவா	695,704

இஷ்ட சித்தியை ஈவோய் சரணம்	700
ஸர்ப்பங்கள் தலைவா ஸாஸ்தா சரணம்	701
ஊகித்தல் ஆமோ உந்தன் லீலை	705
பாஷணடன் போன்றோய் பர்வதன் தோழா	706,707
ஐந்தொழில் கொண்டோய் அனைவரின் நண்பா	708,709
மஞ்சத்தில் உறங்கும் தாமரைக் கண்ணா	710,711
தாமரை முகத்தோய் தீயின் நிறத்தோய்	712,713
அன்பின் உயர்வே தங்கத்தின் உருவே	714,715
சிவகணத் தலைவா செம்மை நிறத்தோய்	718,716
அழகா, காந்தா மங்களா சரணம்	720,721,722
கௌரீ புத்ரா தக்ஷனை அழித்தோ	717,723
உயர்ந்தோய் உயர்பலக் கரத்தோய் சரணம்	725,724
பூரணை புஷ்கலை தழுவிடும் மார்ப	719
காத்யா யனிமகிழ் பாலா சரணம்	726
எழில்முகம் கொண்டோய் ஜலஉரு வினனே	727,728
கர்ப்ப வடிவினோய் கர்வ பங்கா	729,730
தர்ப்பா சனத்தோய் சாக்தரின் தேவா	731,732
அமாவாசை பூஜை ஏற்பாய் சரணம்	736
உத்தமா தூய உருவே சரணம்	733,734
விலங்கிற் கெல்லாம் தலைவா சரணம்	735
நாகப் படம்போல் நளினம் மிக்கோய்	737
நீண்ட சீரா சூரிய தேவா	738,739
படக வாத்ய த்வனியில் மகிழ்வோய்	740
ப்ருந்தா, உயர்ந்த அந்தணா சரணம்	741,744
மாபெரும் சேனை காவலா சரணம்	742,743
ப்ரம்ஹ ரஸிகனே பேரொளி சரணம்	745,749
கைலை மலைபோல் காந்தியோய் சரணம்	747
சுவை அறிந்தோய் நீ இருள்அகற் றிடுவோய்	746,748
மஹா நீலனை தளபதி ஆக்கினை	750
சந்தன மணத்தோய் திருமகள் குமரா	751,752

வில்வ மரத்தில் விருப்பம் கொண்டோய் 753
அரக்குப் போன்றோய் அழகிய செவியோய் 754,755
மதிநிகர் எழிலோய் அமிர்தம் சுவைப்போய் 756,757
அம்பிகை புதல்வா ஐயப்பா சரணம் 758
பிந்து சக்கரம் வந்தே அமர்வோய் 759
பலனுக்கு நாயகா பகைவர்க்கு காலா 760,762
ஆபத்தில் உதவும் காவேரி தீரா 761,764
தப்தக்ருச்ர நோன்பின் பலனே 763
கோடி ஜனங்கள் சூழவே வாழ்வோய் 765
பன்னெடுங் காலம் பக்தரைக் காப்போய் 766
தோகை மயில்மேல் ஆவலா சரணம் 767
ஆயுள் நிறைந்தோய் தீவினை அகன்றோய் 768,769
சிவனின் தூதா அவதூதர் தேவா 770,774
ஆயுர் வேதம் அறிந்த மருத்துவா 771
ஹம்ஸ ரூபா பரம ஹம்ஸா 772,773
மின்னலைப் போலே தாவியே செல்வோய் 775
குதிரையை இயக்கும் ஆற்றலா சரணம் 776
குதிரை வீரரின் பலமாய் அமைவோய் 777
துஷ்டர்கள் முன்னே கோர முகத்தோய் 779
பக்தர்கள் பார்வையில் சுமுகா சரணம் 778
உன்னை நினையார் செயலில் தடையும் 780
மன்னி என்றால் நிறைவும் தருவாய் 781
விக்ன விநாசனா புனிதா இறைவா 782,783,784
கதிருக்கு ஒளியைப் பொழிவாய் சரணம் 785
பார்வதி மகிழும் பாலா சரணம் 786,787
அரக்கரை அழிப்போய் கருப்புக் கழுத்தோய் 788,789
க்ரீஷ்ம காலக் கதிரொளி படைத்தோய் 790
க்ரீடம் தரித்தோய் பதமலர் சரணம் 791
கல்ப சாஸ்திரம் கற்றோய் சரணம் 792
ஊழித் தீயை வாரி விழுங்குவோய் 793

ஞானம் நல்கி அஞ்ஞானம் அழிப்போய்	794,795
வீர மார்த்தண்டர் விரும்பிய கொடுப்போய்	796
வீர பாகுவே மூல முதலே	797,798
வீரசிம் மாசனம் வீற்றிருப் போனே	799
வீரச் செயலோய் விஷேஷ ஞானியே	801,800
ஆஸ்ரா ஸ்த்திரம் விடுப்போய் சரணம்	802
ஸாத்யகி வடிவோய் வாக்குக்கு அதிபதி	803,805
நாக ரத்தினம் அணிந்தோய் சரணம்	804
உமையின் புதல்வா இனியஸ்ருங் காரா	810,812
பரமனின் உருவோய் ப்ரளய காலா	806,807
காலி கேயனை அழித்தஸம் ஹாரா	815
சிந்தூர திலகம் குங்குமம் அணிந்தோய்	813,814
யுத்தத் தலைவா உரைவல் லாளா	808,809
நக்ஷத்ர லோக நாயகா சரணம்	811
மதயானை மேலே பவனி வருவோய்	816
பரமெனும் அக்கரை அடையச் செய்வோய்	817
நாககந் தர்வர் பூஜைசெய் நாதா	818
சிந்தா மணிஅணி செல்வக் குமாரா	823
நல்ல கனவாய் வந்திடும் தேவா	819
தீய கனவின் பீடை ஒழிப்பாய்	821
விழிப்பு நிலையில் தோற்றம் தருவோய்	820
மனக்கவ லையை மாற்றிடு வோயே	822
சரா சரங்களைப் படைத்தவன் நீயே	824
குண்டலம் அசையும் பளிங்கு முகத்தோய்	825,826
சங்கம் பதுமம் இருவகை நிதியே	828
மூல முனிவன் போற்றும் பதியே	827
தர்ம சாஸ்தா கேதா ரேஸா	831,832
எருமேலி நிலையா கால ரூபா	833,834
கற்பூர ஜோதியில் சுடர்வோய் சரணம்	829
கருணை துளிர்க்கும் விழியோய் சரணம்	830

களைப்பே இல்லா கல்ப விக்ரஹா	835
பைரவர் வழிபடும் பரமமெய்ஞ் ஞானி	836,845
காக்கை இறகையும் கருவியாயக் கொண்டோய்	837
கலைகளின் முடிவே காலத்தின் கதியே	838,839
சூர்ய மண்டலா தேவேந்தரன் தேவா	840,841
தானிய விளைச்சலைத் தகவாய்த் தருவோய்	842
ஐம்பது எழுத்தும் தானெனக் குறித்தாய்	843
சிந்தை அற்றாய் சீரினைச் சேர்ப்பாய்	844,846
தன்பலம் தன்னில் தருக்கி இருப்போய்	847
செம்பருத்தி என மலர்வோய் சரணம்	848
எதிரியை வீழ்த்தி அறிவால் வெல்வாய்	849,850
விராதனை விரட்டி வாகை சூடுவோய்	851,863
சித்ர குப்தனின் தோழா ஓவியா	852,853
இசையில் லயிப்போய் முல்லைப்பூ அணிவாய்	854,861
வண்டு விழிகள் வான்நிறம் உயர்முகம்	859,858,856
தாமரைக் கரத்தோய் அபயம் அளிப்பாய்	860,864
அதிசாரம் போக்கும் அருமருந் தாவாய்	862
தத்துவம் நீயே தத்துவம் சொல்வாய்	865,866
முதியோன் ஆவாய் ஆணைகள் இடுவாய்	867,868
வேதம் புகலும் மூலப் பொருளே	869,870
புகழில் மயங்கி கர்ஜனை செய்வாய்	857,855
ப்ரக்ருதி நீயே முதற்கா ரணனே	871,872
ஆதி நாதனே தூயதைச் செய்வோய்	873,874
பிறவியை வென்றோய் மகேசா சரணம்	875,878
கானப் ப்ரியனே கான லோலா	876,877
ஞானப் பால்விழை ஞானியே சரணம்	880,879
கைலையோன் மைந்தா கனிகள் சுவைப்போய்	881,886
அமிர்த கலசம் ஏந்திய கரத்தோய்	882
ஆசைகள் அற்றோய் அழியா நிதியே	883,884
இன்குரல் படைத்தோய் ராவணன் நேசா	885,888

ரத்ன குண்டலச் செவியோய் மோஹன 887,891

கனத்கா லேசனின் அன்பா சரணம் 889

க்ரௌஞ்சனை ஒழித்தாய் ஹாரங்கள் தரித்தாய் 890,894

ஆயுளை வித்தையை அளிப்போய் போற்றி 892

வெண்பட் டாடை உடுப்போய் போற்றி 893

தாழம்பூப் பிரியனே வேழ வேந்தனே 895,896

மயிலின் அகவலில் ஸாரங்கி இசையில் 897,899

சாதகப் பறவையின் குரலில் மகிழ்வோய் 900

கார்த்திகைப் பெண்கள் போற்றிய பாலா 898

சமரீ விலங்குகள் சார்வோய் சரணம் 901

சபதி மலையின் சாஸ்தா சரணம்

சரணம் சரணம் சரணம் சரணம்

மாமரங்கள் சூழும் வனம் கோயில் கொண்டாய் போற்றி 902

வேதபலன் தருவாய் விழிநோயைப் போக்கி 903,905

ருத்ராட்ச ஜபமாலை மோஹமிகு சேனை 904,907

முகுந்தனின் வழிபாடு முனிவர்களின் மகிழ்ச்சி 906,908

அதிகார முத்திரையால் ஆள்பவனே சரணம் 910

அரூபனே மீனாட்சி அம்மையவள் மைந்தா 914,911

எண்ணெய்அபி அஷகனே இனி ஏது சோம்பல் 909,912

பிணிசோகம் இல்லாத பெருமானே சரணம் 913,919

ஆறுவத குணம்கொண்டோய் ஏழுகோள் போற்றும் 917,918

அநுராகம் அறிந்தவனே அக்னிமயம் ஆனோய் 920,922

நாதமிகு வெண்சங்கம் ஏந்தியகை முக்கண் 915,916,923

ஸப்தரிஷி யோகவரம் பெற்றதுவும் உன்னால் 921

திரிவேணி சங்கமத்தில் நீராடும் பலனை

சபதிமலை பம்பையினில் தருகின்ற அரசே 924

ஒருநான்கு முகத்தோடு கருஞ்சட்டை அணிந்து 926,925

மரங்களடர் சோலையிலே வாழ்வாயே சரணம் 927

சலங்கைஅணி திருவடிகள் சரணமய்யா சரணம் 928

வண்டையம் அணிகரங்கள் வாழ்த்திடுக சரணம் 929

உலக உரு தூயமுகம் திருநீறு அணிந்தோய் 930,931,932
மாகாளி பூஜிக்கும் மஹிமையையும் பெற்றோய் 933
ஏக்தகும்பன் குலத்திற்கு யமன்போன்றாய் நீயே 934
எழுசுரத்தில் நிஷாதம் உனை ஈர்த்திடவே ரசிப்பாய் 935
பிரதட்ச்ண நமஸ்காரப் பெரும்பலனை அளிப்பாய் 936
பக்தர்களின் சத்ருக்கள் பறக்தோடக் களிப்பாய் 937

எப்போதும் வில்அம்பை வைப்பாகக் கொள்வாய் 938
அச்சம்அகல் மந்திரத்தை ரகசியமாய் உரைப்பாய் 939
குப்ஜிகா தேவதையை தேகத்தில் வைப்பாய் 940
அஸ்திரமாய் புகையதனை அவுணர்மேல் தொடுப்பாய் 941,944
ராவணனைக் கொன்ற அந்த ஸ்ரீராமன் உருநீ 943
கண்கூசும் காந்தியொடு பொலிபவனே சரணம் 942
கதைபாசம் கபாலமென ஆயுதங்கள் கொண்டாய் 945,946,947
விதவிதமாய்ப் படைக்கலங்கள் விடுவிப்பாய் சரணம் 950

ஓராயிரம் தலைகள் இருமடங்கு விழிகள் 948,949
எலும்பாலே மாலைகளை அணிந்தும் நீ வருவாய் 951
நீலவண்ணத் திருமேனி சிவந்தகடைக் கண்கள் 952,953
ஈராறு நாள்வேள்வி நிறைவுபெற மகிழ்வாய் 954
பௌண்டரீகயாகம் பார்ப்பதற்கு விரைவாய் 955
அப்தோர் யாமமெனும் ஹோமமய மாவாய் 956
சயனம் பசுபந்தம் யாகங்கள் ஏற்பாய் 957,958
வாஜபேய யாக தேவதையாய்ப் பொலிவாய் 959

பீரம்மன்முதல் புழுக்கள்வரை காவல்தெய்வம் நீயே 960
ஜீவர்களின் மாயையினை தீர்ப்பதற்கு முனைவாய் 962
சண்பகப்பூ என்றாலே சந்தோஷம் அடைவாய் 961
கல்பத்தின் யஜமானன் கல்பம்பல காண்பாய் 964,965
ப்ரம்மத்தை அறிகின்ற பெருஞானி சரணம் 963
நான்மறைகள் உன்னாலே ஒளிவீசித் திகழும் 966
அரவரசன் உருவினனே பூர்ணகும்பம் தரித்தாய் 968
பிறைநெற்றி பீடுறவே குங்குமத்தைப் பொறித்தாய் 969

சிலித்ரஇலை போன்றவனே காலனையும் அழிப்பாய் 970.973
சிங்கமுக அவுணனையும் கொன்றேநீ களிப்பாய் 971
குயிலோசை கேட்பாய் நையாபிக மதத்தாய் 972,974
பௌத்தரை ஒழிப்பாய் வேள்வியிலே மகிழ்வாய் 975,977
பொற்றாமரைக் கரத்தாய் பித்ருக்கள் நண்பா 976,978
பெற்றவனைப் போல்நீயும் பேணவரும் அன்பா 979
காலாட் படையதனின் காவலனும் நீயே 980
தயிர்கலந்த நெய் உண்டு சௌபாக்யம் தருவாய் 981

சூராதி சூரரையும் தூளாக்கிக் குதிப்பாய் 982
பாணங்கள் விடுவதிலே யாருமில்லை இணையாய் 983
பெருமழையை அடக்கிடுவாய் அரவத்தைப் பிடிப்பாய் 984,985
நம: ஸ்வாஹா: வஷட் ஸ்ரௌஷட் மந்த்ரபலன் கொடுப்பாய் 986
சூரியனின் ஒளிக்கழுத்து மணிகண்டன் பெயரே 987,988
வீணையினை மீட்டும்விரல் இசைநாட்டம் நினதே 989,990
ஞானமெனும் கண்ணாடி மாளிகையில் வசிப்பாய் 991
மணிகூட மலைமேலே கொலுஅமர்வாய் சரணம் 992

சிவலிங்க பூஜைவதி செப்புபவன் நீயே 994
முழுமதியே யாகபலன் முழுமையையும் தருவோய் 995,996
மைனாக மலைவாழ்வாய் மதுவம்சம் அழித்தாய் 997,998
தமாலஇலை ஒளிபோன்று தண்ணருளைப் பொழிவாய் 1000
பல்லோரும் சரணமெனும் சொல் நாதம் கேட்டு
வில்லேந்தித் திரிவதந்தன் வீர விளையாட்டு 993
தாலகண்ட புரமென்னும் தலைநரம் கோட்டை 999
சபதிமலை உனைஅடைய வழிகாட்டும் பாட்டை

பலன்

சாஸ்தாவின் திருநாமம் ஆயிரமும் சொல்வார்
சௌபாக்யம் பெறுவதுடன் பிறவியையும் வெல்வார்
சீரோங்க சிறப்போங்க ஜெயமோங்க வாழ்வார்
ஜெகமெங்கும் புகழோங்க திருப்பாதம் காண்பார்

மங்களம் சுபமங்களம்

சாமியே சரணம் ஐயப்பா...!

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கரா!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்

குறிப்புகள்

இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக் காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

நெய்தல்
பதிப்பகம்